# பூ மலர்வதற்கு வழி விடுங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



- சிறியவர்கள் நாம் மலர்வதற்குத் தயாரான சிறிய பூ மொட்டுக்கள் போன்றவர்கள்.

- பெரியோர்களின் அன்பு, பாதுகாப்பு அந்த மொட்டுக்களில் விழும் சூரிய வெளிச்சம் போன்றது.

- அழகாக மலர்ந்து எதிர்காலத்தில் வாசனை வீசுவதற்கு நாம் எதிர்பார்த்திருப்பது மிகுந்த ஆசையுடன்! எதிர்பார்ப்புக்கள் பலவற்றினை எண்ணத்தில் நிரப்பிக் கொண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- பெரியோரான மாமாமார் மற்றும் மாமிமார் மிகவும் மோசமான முறையில் சிறியோரான எம்மை நடாத்துவதில் நாம் ஒரு போதும் விருப்பம் இல்லை.
- உங்களுக்குத் தெரியும் தானே, 18 வயதிற்கு குறைந்தவர்களையே சிறுவர்கள் என்று சொல்கின்றார்கள்.
- இவ்வாறு சிறுவர்களான எமது உடலிற்கும் மனதிற்கும் தொல்லை தருவது பாரிய தவறு என்பது உங்களுக்குத் தெரியுமா?
- எமது உடம்பிற்கு வலியினை ஏற்படுத்துதல், காயத்தினை ஏற்படுத்துதல், வேதனையினைக் கொடுத்தல் போலவே மனதிற்கு கவலையினை ஏற்படுத்துதலும் பாரிய தவறு என்பது பெரியவர்களுக்குத் தெரியாமல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- சிறுவர்களான எமக்கு அன்பு, பாதுகாப்பு, சந்தோஷம் தான் எப்பொழுதும் வேண்டும் என்பதனை பெரியவர்களான அனைவரும் தெரிந்து கொண்டிருந்தால் எவ்வளவு சிறந்தது?
- சிறுவர்களான எமக்கு கவலை ஏற்படுத்தும் இன்னுமொரு தொல்லை தான் பாலியல் வன்முறைகளில் எம்மை ஈடுபடுத்துதல். நாம் ஒன்றுமே தெரியாத விடயங்களில் எமது மனதினை ஈடுபடச் செய்வது பெரியோர்களே. அது பாரிய தவறு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❀ பாலியல் என்பது எமது உடம்பினை தொடுதல் அல்லது எம்மைக் கொண்டு அவர்களது உடம்பினைத் தொட்டுக் கொள்ளுதல் போன்றன ஆகும். அது மட்டுமின்றி சில பெரியவர்கள் எம்மை தேவையற்ற முறையில் முத்தமிடுதல், கட்டிப் பிடித்து அணைத்தல்,எமது உடம்பில் ஒட்டிச் செல்லுதல், உடம்பினை இடித்துச் செல்லுதல் போன்றன எமக்கு தொல்லை தரக் கூடிய செயல்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❀ சிறுவர்களான எம்மை பாலியல் வன்முறைக்கு உட்படுத்த எமது உடம்பினை தொட வேண்டியதில்லை. சில பெரியோர்கள் அவர்களது பாலியல் உறுப்புக்களை எமக்கு வெளிக்காட்டி, ஆபாச திரைப்படம் மற்றும் புகைப்படங்களை எமக்கு காட்டி ஆபாச புகைப்படங்களுக்கு முகங் கொடுப்பதற்கு எம்மை தூண்டுவதன் மூலம் பாலியல் வன்முறைக்கு எம்மை உட்படுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- சிலர் ஆபாச தொலைபேசி கலந்துரையாடல்களைச் செவிமெடுக்குமாறு எம்மை கட்டாயப்படுத்துகின்றனர். அதுவும் பாலியல் வன்முறையில் ஒன்று என்பதனை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்.
- இப்படி இருக்கையில் மாமாமாரே மாமிமாரே நாம் இதற்கு முன் குறிப்பிட்ட எல்லா விதமான தவறுகளுக்கும் சட்ட ரீதியாக பாரிய தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான தவறான விடயங்களினால் உலகத்தினை அழகுபடுத்த காத்திருக்கும் அழகான மலர் போன்ற சிறுவர்களான எமது எதிர்காலம் இருண்டு விடும் என்பதனாலேயே இவ்வாறான சட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- எமது துரதிஷ்டத்தினால் பெரும்பாலான வேளைகளில் இவ்வாறான தவறுகள் நிகழ்த்தப்படுவது, எம்முடைய சுற்றுச் சூழலில் வாழும் எமக்கு நன்றாக அறிமுகமான உறவினர்கள், குடும்பத்திற்குப் பழக்கமானவர்கள், அன்றன்று எம்மை சந்திக்கும் நபர்கள் மூலமே. இருந்தும் ஏனைய வெளியிடத்து நபர்கள் மூலமும் எமக்கு வன்முறை ஏற்படுத்தக் கூடிய நிலை உருவாகும் என்பதனை நாம் எந்த நேரமும் சிந்தித்து இருத்தல் வேண்டும் என்பதனை எமக்கு எடுத்துச் சொல்லித் தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❀ வன்முறைகளுக்கு, தொல்லைகளுக்கு, ஆளான நாம் இருப்பது மிகுந்த பயத்துடன், பயத்துடனான நடுக்கத்துடன், தன்னைப் பற்றிய குறைந்த அவதானத்துடன், இதனால் எமது கல்வி கற்கும் திறன் முடக்கப்படுகின்றது. சமூகத்திற்கு முகங் கொடுப்பதற்கு எமக்கு பயம் ஏற்படுகின்றது. உடல் ரீதியாக ஏற்படுத்தப்படும் தொல்லைகளினால் நாம் வலியுடன் கூடிய வேதனையினை அடைகின்றோம். இன்னும் சிலர் வாழ்நாள் முழுவதும் உடல் ரீதியான மற்றும் உள ரீதியான அங்கவீனமுற்ற நிலைக்குத் தள்ளப்படவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❀ பாலியல் வன்முறைகளினால் சில சிறுவர்கள் சிறு பராயத்திலேயே பாரதூரமான சமூக நோய்களுக்கு ஆளாகின்றனர். சில சின்னஞ்சிறு பெண் பிள்ளைகள் சிறு பராயத்திலேயே அம்மாமார்கள் ஆகின்றனர். இன்னும் சிலர் உலகத்திற்கு முகங் கொடுக்க முடியாமல் தங்களது வாழ்க்கையினை முடித்துக் கொள்ளக் கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அம்மா, அப்பா, மாமி, மாமா, அண்ணா, அக்கா நாங்கள் பெரியோரான உங்களது உலகத்தில் வேண்டி நிற்பது என்ன? எம்மைப் பற்றியும் நாம் தினமும் சந்தித்துப் பழகுகின்ற நபர்கள் குறித்து எப்பொழுதும் அவதானத்துடனும் கவனத்துடனும் இருங்கள்! எமக்கு வன்முறைகள் தொல்லைகள் ஏற்படுவதற்கு ஏதுவான சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்ளுங்கள்! எமது பாதுகாப்பு, அரவணைப்பு போன்றவற்றைப் பற்றி அவதானத்துடன் இருங்கள். எம்மிடம் அன்பு காட்டுங்கள்! எமது விடயங்களைச் செவிமெடுங்கள்! எமக்கு தெளிவு படுத்துங்கள்!
- எம்மை வன்முறைக்கு உட்படுத்துதல், தொல்லைப்படுத்துதல் இலங்கையின் சட்ட திட்டங்களுக்கமைய 20 வருடங்கள் பாரிய வேலைகளுடன் கூடிய சிறை தண்டணையினைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய பாரிய தவறு என்பது எமக்குத் தெரியும். இருந்தும் எமக்கு வன்முறை, தொல்லை தரும் பெரியவர்கள் இதனைத் நன்றாகத் தெரிந்திருந்தும் தவறு இழைப்பது ஏன்?
- சின்னஞ்சிறு எம்மை வன்முறைக்கு, தொல்லைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டால் அறியத் தருவதற்கு தகுந்த இடங்கள் பல உள்ளன. எமக்கு அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் அல்லது அருகாமையில் உள்ள பிரதேச செயலகத்தில் உள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தரிடம் அறியப் படுத்த முடியும்.
- அவ்வாறு இல்லையாயின் சிறுவர் வன்முறை தொடர்பிலான குற்றச் சாட்டுக்களை தெரிவு படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இலகுவான தொலைபேசி இலக்கமான 1929 இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் அறியத் தர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ கொஞ்சம் சிந்தியுங்கள், மலர்வதற்கு காத்திருக்கும் மொட்டுக்களை மலர்வதற்கு இடம் அளிக்காமல் நசித்து கிழித்து விடுவதற்கு இடம் அளித்தல் எவ்வாறு பட்ட அழிவாகும்?

❀ மலர்வதற்கு காத்திருக்கும் மலர் மலரும் வரை கவனமாக, அவதானமாக அத்துடன் அன்பாக பராமரிக்காமல், மலர் மொட்டு நசிந்து அழிந்து விட்டதன் பின்னர் அதற்கு தண்டனை வழங்கப்பட்டாலும், எமது மனதில் உள்ள கவலைகள் எப்பொழுதும் மறைந்து மறக்கக் கூடிய ஒன்றாகவே அமையும் என்பது சிறியோரான எமக்கு தோன்றுகின்றது.

❀ சின்னஞ்சிறு சிறுவர்களான நாமே எமது நாட்டின் உயிர் நாடிகள். எமது எதிர்காலம் பெரியோர்களான உங்களைச் சார்ந்தே.

சின்னச் சின்ன பூ மலர
முழு உலகமும் வாசம் வீச
வேண்டாம் எமக்கு வெறுப்பை காட்ட
எமது உலகிற்கு வெளிச்சம் தாருங்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ மலர்வதற்கு வழி விடுங்கள்!

## சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்போம்!

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
03 வது மாடி செத்சிறிபாய II கட்டிடத்தொகுதி
பத்தரமுல்லை.
தொலைபேசி :- 011286062 / 0113082483
பாக்ஸ் : 0112186065
மின்னஞ்சல் : pcc@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org